**பாடம் – 4**

# பாவத்திலிருந்து இரட்சிப்பு
# SALVATION FROM SIN

நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம் (ரோமர் 3:23) மரணத்திற்கு நாம் எல்லாரும் பாத்திரவான்களாய் இருக்கிறோம். கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினால் உண்டான நித்திய ஜீவன் (ரோ.6:23) எல்லா தேசத்திலும் உள்ள மனிதனுக்கும் இரட்சிப்பை வழங்க தேவன் முற்றிலும் கிருபை பொருந்தினவராய் இருக்கிறார்.

"ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்கதாக தேவ கிருபையானது பிரசன்னமாகி" (தீத்து 2:11) நாம் பாவம் நிறைந்தவர்களாகவும், எதிர்க்கிறவர்களாகவும் இருந்தபோதும் நாம் இரட்சிக்கப்படுவதற்கான வழியைக் காண்பித்து தேவன் தன்னுடைய அன்பின் ஆழத்தை விளங்கப் பண்ணி னார். "நாம் பாவிகளாய் இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." (ரோ. 5:8)

எவ்வாறு தேவன் நம்மை நமது பாவங்களில் இருந்து இரட்சிக்கிறார்? நமது பாவத்திற்கான தண்டனைத் தொகையை இயேசுவைச் செலுத்தும்படி அனுமதித்ததின் மூலமாக அவர் நம்மை இரட்சிக்கிறார். நாம் எல்லாரும் பாவத்தினால் ஏற்படும் குற்றமனப் பான்மையோடு இருப்பதால், நாம் ஒருவருக் கொருவர் எதுவும் செய்ய இயலாது. பாவம் இல்லாத ஒருவரால் மாத்திரமே நமது தண்டனையை ஏற்றுக் கொள்ள முடியும். இயேசு "பாவஞ்செய்யவில்லை" அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவும் இல்லை." (1பேதுரு 2:22) ஆகையால் அந்த நமது இடத்திற்கு தண்டனை அனுபவிக்க அவர் தகுதியானார். நம்மை இரட்சிக்க தேவனுக்குத் தேவைப்பட்ட விலை, ஒன்றும் அறியாத பலியின் இரத்தமாகும். "இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டா காது" (எபி. 9:22) அவர் பாவம் செய்ததற்கான எந்த குற்ற மனப்பான்மையும் இல்லாதிருந்தும், இயேசு மரச் சிலுவையில் வஞ்சகமான பாவிகளால் அறையப்பட்டார். அவர் பயங்கர வலிகளை வெகுநேரம் அனுபவித்தார். அவர் மரிப்பதற்கு போர் சேவகர்களில் ஒருவர் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது (யோ. 19:34) இந்த இரத்தம் நமது பாவத்திற்காகப் படைக்கப்பட்டது (எபி. 9:12). இந்த இரத்தத்தினாலே இயேசு நமது பாவங்களைக் கழுவுகிறார். (வெளி. 1:5) இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறொன்றி னாலும் நமது பாவங்களை கழுவவோ, நீக்கவோ இயலாது.

நமது பாவங்கள் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படவில்லை என்றால், தேவனிடமிருந்தும் அவருடைய எல்லா நன்மையிலிருந்தும் எப்பொழுதும் பிரிக்கப்பட்டு, நாம் எல்லாரும் தண்டிக்கப்பட்டிருப்போம். (2தெச.1:9) இயேசு கிறிஸ்து தேவனை விட்டுப் பிரிந்ததின் மூலம் ஆவிக்குரிய மரணத்தை ஒவ்வொரு மனிதனுக்காகவும் சிலுவையில் ருசிபார்த்தார். (எபி. 2:9) "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?"

நம்முடைய பாவங்களுக்காக தண்டனையை ஏற்றுக் கொண்டு, பின் தன்னுடைய இரத்தத்தை எடுத்து, அவை எல்லாவற்றையும் கழுவினார். இதைக்காட்டிலும் இயேசுவால் இன்னும் எவ்வளவு அன்பு காட்ட இயலும். ஆனால் "எவ்வாறு நாம் நமது பாவம் நம்மில் இருந்து நீங்கவும், எவ்வாறு நித்தியஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் கூடும்?" என்ற கேள்வி இன்னும் நம்மில் இருக்கிறது.

**இரட்சிப்பில் மனிதனுடைய பங்கு :**

இரட்சிப்பு தேவனுடைய கிருபையால் எல்லா ருக்கும் அளிக்கப்பட்டாலும், மனிதன் செய்ய வேண்டிய செயலும் அதில் இருக்கிறது. இல்லையென்றால், அவர்கள் என்ன செய்கின்றனர். என்ன சிந்திக்கின்றனர் என்று எதுவும் இல்லாமல் எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள்.

இயேசு எல்லாருடைய பாவங்களுக்காக - உலகில் உள்ள எல்லாருடைய எல்லா பாவங்க ளுக்காகவும் மரித்தார். (1யோ. 1:2). ஆனால் எல்லா மக்களும் இரட்சிக்கப்பட மாட்டார்கள். ஏனென்றால், அநேகர் தேவனுடைய ஈவை பெறுவதற்கான முறைகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இரட்சிப்பை நாம் பெற, கீழே சொல்லப் பட்டுள்ள தேவன் எதிர்பார்க்கும் காரியங்களை நிறைவேற்ற வேண்டும்.



முதலாவது "தேவனை நாம் விசுவாசித்து அவர் இருக்கிறார் என்று நம்ப வேண்டும்". "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமா யிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவ னிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி. 11:6)

மேலும் நாம் இயேசுவை தேவனுடைய குமாரன் என்றும், நம்மை பாவத்திலிருந்து இரட்சிக்க இயேசுவை அனுப்பினார் என்றும் விசுவாசிக்க வேண்டும். "ஆகையால் நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்" (யோ. 8:24)

இரண்டாவதாக நமது பாவத்திலிருந்து மனந் திரும்ப வேண்டும். அந்தப்படி நீங்கள் மனந் திரும்பாமல் போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் (லூக்.13:3) என்று இயேசு தெளிவாக கூறியிருக்கிறார். மனந்திரும்புவதின் பொருள் என்ன? இந்த வார்த்தையினுடைய விளக்கத்தில் சில பகுதிகள் உள்ளன. முதலாவது, பாவம் என்றால் என்ன என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக, பாவம் நமக்கு என்ன செய்கிறது என்று நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அது நம்மை தேவனுடைய ஐக்கியத்திலிருந்து பிரித்து, நித்திய தண்டனைக்குள்ளாக வாதிக்கிறது. பாவம் அறியாத இயேசு சிலுவையில் அறையப்படும்படி செய்தது. நமது பாவங்களுக்காக அவர் தன் னுடைய இரத்தத்தை சிந்த வேண்டியிருந்தது.

இந்த சத்தியத்தை நாம் நினைக்கும்போது நாம் செய்ததைக் குறித்து நமக்கு வருத்தம் ஏற்படும். அந்த வருத்தம் மனந்திரும்புதல் அல்ல. ஆனால் அதினால் மனந்திரும்புதல் ஏற்பட ஏதுவுண்டு. "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக் கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்கு கிறது" (2கொரி. 7:10)

நம்முடைய பாவத்தின் மீதான உண்மையான துக்கம், நமது சிந்தனை மற்றும் செயல்படும் முறையை மாற்றும்படி செய்யும். இயேசுவுக்கு பாதையைச் சரிசெய்யும்படி வந்த யோவான் "மனந்திரும்புதலுக்கேற்ற கனியைக் கொடுங்கள்" என்று மக்களிடம் கூறினார். (லூக். 3:8) மற்ற வார்த்தையில் சொல்வோமானால் நமது வாழ்க்கை வழியில் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும்.

"அறியாமையுள்ள காலங்களை தேவன் அறியாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந் திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல் லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதன் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப் பண்ணி னார்" என்றார். (அப்.17:30-31)

"ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும், லௌகிக இச்சைகளையும் வெறுக்கிற,தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்தில் ஜீவனம் பண்ணி" (தீத்து 2:11,12)

நாம் வாழும் வழியை மாற்றிக் கொள்ள (நமது சித்தத்திற்கு பதிலாக தேவனுடைய சித்தத்தை செய்யும்படி) தயாராக இருந்தால், இயேசு தேவனுடைய குமாரன் என்று மனுஷர் முன்பாக அறிக்கையிட தயாராக இருக்க வேண்டும். (மத்.10:32,33 ; அப்.8:37 ; 1தீமோ.6:12) "ஏனென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப் படும்" (ரோமர் 10:9-10). இந்த வசனம் இயேசுவின் மீதுள்ள விசுவாசம் மற்றும் அவரைப் பற்றி செய்ய வேண்டிய அறிக்கை ஆகியவற்றைப் பற்றி விளக்குகிறது.

கடைசியாக, ஒருவர் தன்னுடைய பாவம் கழுவப்படும்படி செய்ய வேண்டியதில் திருமுழுக்கு இணைந்துள்ளது. மாற்கு 16:16ல் இயேசு "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்ற வன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்." என்றார்.

கவனியுங்கள் : இரட்சிப்பு, ஒரு மனிதன் விசுவாசித்து, திருமுழுக்கு பெற்ற பின்னரே கிடைக்கிறது. அது இவ்விரண்டிலும் ஏதாவது ஒன்றை மாத்திரம் செய்வதினால் கிடைப்பதில்லை. பாவங்கள் கழுவப்படுவதற்கு முன் இவ்விரண்டு -மே தேவை.

சுவிசேஷம் உலகம் எங்கும் பரவுவதின் மூலமாக மக்கள் தங்களின் பாவத்திலிருந்து இரட்சிப்பைப் பெற்ற சில சம்பவங்கள் புதிய ஏற்பாட்டுப் புஸ்தகமான அப்போஸ்தலர் நடபடி களில் உள்ளது. இயேசு பரம் ஏறின பின்பு (அப். 1:9-11) அப்போஸ்தலர் மீது பரிசுத்த ஆவி வந்தபின் (அப். 2:1-4) பெந்தேகொஸ்தே என்னும் நாளில் முதல் சுவிசேஷ பிரசங்கம் செய்யப்பட்டது.

பேதுருவின் பிரசங்கம், அநேகர் தாங்களே கிறிஸ்துவை (தேவனுடைய குமாரனை) சிலுவை யில் அறைந்தனர் என்று உணர்த்தியது. அதன் பிறகு அவர்கள், மன்னிப்பு பெறும்படி என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். (அப். 2:36-37)

"பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந் திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞான

ஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' என்றார். (அப். 2:38)

''அவனுடைய வார்த்தைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்'' (அப். 2:41)

இந்த மக்கள் பேதுருவின் பிரசங்கத்தின் மூலம் இயேசுவே கிறிஸ்து, தேவனுடைய குமாரன் என்று உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் அந்த உண்மையை விசுவாசித்தால், அவர்கள் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்து கொள்ள விரும்பினார்கள். மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று திருமுழுக்கு பெறுங்கள் என்று பேதுரு அவர்களுக்கு கூறினார்.

பாவத்திற்கான தீர்வு இன்றும் இதுவே. இன்று ஒருவர் பாவமன்னிப்பு பெற விரும்பினால், அவர் பாவங்கள் கழுவப்படும்படியாக மனந்திரும்பி திருமுழுக்கு பெற வேண்டும். நம்மை கழுவக் கூடியது தண்ணீர் அல்ல. இயேசு தன்னுடைய சொந்த இரத்தத்தால் நமது பாவத்தைக் கழுவுகிறார் (வெளி. 1:5) நாம் திருமுழுக்கு பெறும் பொழுது அவர் நம் பாவங்களைக் கழுவுகிறார். (அப். 22:18)



ஏன் அதைச் செய்யும்வரை காத்துக் கொண்டிருக்கிறார்? பாடம் 5 அந்த கேள்விக்கு தெளிவாக பதில் அளிக்கும். அதற்கான ஒரு காரணம் தேவன் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். அதற்கு நீங்கள் மனமுவந்து கீழ்ப்படிவீர்களா?

''அதற்கு ஒப்பனையான ஞானஸ்நான மானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல் மனசாட்சியின் உடன் படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலி னால் இரட்சிக்கிறது'' (1பேதுரு. 3:21)

நீங்கள் வேத வசனத்தின்படி திருமுழுக்கு பெற்றிருக்கிறீர்களா?

தயவுசெய்து கவனியுங்கள். நீங்கள் சிறு குழந்தையாய் இருக்கும்போது தெளிக்கப் பட்டீர்களா? என்று நாங்கள் கேட்கவில்லை. அநேகர் குழந்தையாய் இருக்கும்பொழுதே தண்ணீரினால் தெளிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் தெளித்தல் வேதாகமத்தின்படியான திருமுழுக்கு அல்ல.

திருமுழுக்கிற்கு பதிலாக தெளித்தல் என்பது 3வது நூற்றாண்டில்தான் துவங்கியது. அது மனித பாரம்பரியத்தைச் சார்ந்ததே. (மத்.15:9) முழுக்குதலுக்குப் பதிலாக, தெளித்தல் ஞான ஸ்நானத்தை முதன்முதலில் கி.பி. 250ல் பெற்றவர் நோவோட்டின் என்பவர்.

இரண்டாவது, நீங்கள் சரியான காரணத்திற் காக திருமுழுக்குப் பெற்றீர்களா? நாமகரண கூட்டம் அநேகவற்றில் அநேகர் தண்ணீரில் முழுக்கு பெற்றிருக்கிறார் கள். ஆனால் அவர்கள் தண்ணீரில் தவறான காரணத்திற்காக முழுக்குப் பெற்றார்கள். உள்ளான கிருபைக்கு வெறும் ஒரு வெளிப்புறமான ஒரு அடையாளம்தான் திருமுழுக்கு என்று சிலர் சொல்லுகின்றனர். இந்த கொள்கையைக் கடைபிடிப்பவர்கள் தாங்கள் முன்னமே இரட்சிக்கப்பட்டதாகவும், அதற்கு அடையாளமாக திருமுழுக்கு பெறுவதாகவும் வாதிடுகின்றனர். அப்படிப்பட்ட போதனைகள் இயேசு கிறிஸ்து மற்றும் அவருடைய அப்போஸ்தலருடைய நேரான எளிமையான வார்த்தைக்கு எதிராக உள்ளது. (மாற்கு 16:15 ; அப். 2:38 ; கலா. 3:27)

நீங்கள் சரியானதை செய்து வேதாகம முறைப்படி திருமுழுக்கு பெற விரும்பினால், எங்களால் ஆன எல்லா வழியிலும் உங்களுக்கு உதவ நாங்கள் ஆவலாய் இருக்கிறோம். நீங்கள் எங்களுடைய முகவரிக்கு எழுதவோ, அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவோ தயங்க வேண்டாம்.